வில்கமுவ பிரதேச சபை
மாத்தளை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மே 11 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 மே 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 மே 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வில்கமுவ பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துக் கணக்கு மீதிக்கும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கிற்கு இடையே ரூபா 1,471,340 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | வேறுபாட்டிற்கான காரணத்தைக் கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 இன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதாக அறிய தருகின்றேன் |
| (ii) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 291,590 பெறுமதியான பாவனைப் பொருட்கள் தளபாடங்கள் மற்றும் பொருத்திகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் கணக்கு சரி செய்யப்பட வேண்டும். | 2020 இன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதாக அறிய தருகின்றேன் |
| (iii) | இருப்புக் களஞ்சியக் கணக்கு ரூபா 364,655 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இருப்புக் களஞ்சியக் கணக்கு சரி செய்யப்பட வேண்டும். | 2020 இன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதாக அறிய தருகின்றேன் |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டின் பொதுக் களஞ்சிய வெளிக்கள களஞ்சியம், எழுதுகருவி களஞ்சிய இறுதி இருப்பு கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வருட இறுதியில் களஞ்சிய இருப்பு கணிப்பீடு செய்யப்பட்டு அப்பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். | 2020 இன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதாக அறிய தருகின்றேன் |
| (v) | புறநெகும செயற் திட்டத்திலிருந்து கிடைத்த நீர்க் குழாய், பாகங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு இறுதி இருப்பிற்கு எடுக்கப்படாததுடன் ஆண்டின் இறுதியில் நீர்க் களஞ்சிய இருப்பு மீதி ரூபா 51,443 ஆன செலவு மீதியாக இருந்தது. | நீர் களஞ்சிய இருப்பு கணிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். | 2020 இன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதாக அறிய தருகின்றேன் |
| (vi) | ரூபா 1,085,000 தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட 02 செயற்திட்டங்களுக்காக முற்பணமாக ரூபா 217,000 கொடுப்பனவு செய்திருக்கையில் கடன்கொடுத்தொராக மொத்த மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கடு செய்யப்பட்டதால் கடன்கொடுத்தோர் கணக்கு ரூபா 217,000 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.. | கடன் கொடுத்தோர் கணக்கு சீராக்கப்பட வேண்டும் | 2020 இன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதாக அறிய தருகின்றேன் |

(ஆ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நீண்டகாலமாகக் நிதிக் கூற்றுக்களில் மாறுபடாமல் முன் கொண்டு வரப்படுகின்ற மாற்றமுராது காணப்படும் ரூபா 910,704 கூட்டுப்பெறுமதியான பெறவேண்டிய 05 கணக்கு மீதிகளின் தொகையை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்டகாலமாக பெறவேண்டிய கணக்க மீதிகள் துரிதமாக அறவிடப்பட வேண்டும். | மீதிகள் தீர்வுசெய்வதற்காக நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் |

(இ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | ரூபா 101,676,086 பெறுமதியான 05 கணக்கு விடயங் களுக்குரிய கணக்காய்விற்காக சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை | கணக்கு மீதிகளின் பெறுமதிக்குரிய பொருத்தமான சான்றுகளுடன் பதிவேடுகள் பேணப்பட வேண்டும். | சரி செய்வதற்கு விடய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக அறிய தருகின்றேன். |
| (ii) | மீளாய்வாண்டில் ரூபா 1,073,365 ஆன தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் அகற்றலாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் அப்பெறுமதி அட்டவணை மூலம் உறுதிப்படுத்தப்பட முடியாமல் இருந்தது. | அகற்றப்பட்ட பெறுமதிகளுக்குரிய அட்டவணை சமர்ப்பிக்கப்பட வேண்டும் | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 1.4. இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவு | சபைக்குரிய வீதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சபைக்குரிய வீதிகள் பிரதேச சபைகள் சட்டத்தின் படி வர்த்தமானியில் பிரசுரிக்கப் வேண்டும். | சரி செய்வதாக அறிய தருகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி விதி இல. 217 | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பீ.எஸ். 46 படிவத்தின் பிரகாரம் பதிவேடொன்று பேணிச்செல்லப்பட்டிருக்க வில்லை. | காணி மற்றும் கட்டிடம் தொடர்பாக பீ.எஸ். 46 படிவம் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,559,960 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,012,600 ஆக இருந்தது.

2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 06 மாதங்களை கடந்திருந்த ரூபா 99,835 பெறுமதியான 07 காசோலைகள் நி.பி 396 (ஈ)பிரகாரம் வருமானத்திற்கு எடுக்கப்பட்டி ருக்கவில்லை. | 06 மாதங்களை கடந்திருந்த ரூபா காசோலைகள் தொடர்பாக நி.பி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | தீர்வையாகாத காசோலைகள் வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 637,907 | 276,316 | 725,208 | 739,717 | 261,808 | 680,000 | 735,479 | 498,701 |
| (ii) | வாடகை | 900,000 | 1,985 | 791,734 | 791,734 | 1,985 | 1,000,000 | 715,010 | 715,010 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | - | 900,069 | - | - | 900,069 | 36,000 | 36,000 | 36,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 10,375,000 | 2,814,156 | 8,933,454 | 8,633,367 | 3,114,242 | 12,450,000 | 17,422,051 | 5,601,031 |
| | மொத்தம் | 11,912,907 | 3,992,526 | 10,450,396 | 10,164,818 | 4,278,104 | 14,166,000 | 18,908,540 | 6,850,742 |

### 2.3.2 ஆதன வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டிய நிலுவை ஆதன வரி ரூபா 739,717 ஆக இருந்தது. | பிரதேச சபை சட்டத்தின் பிரகாரமும் நிர்வாக விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்து நிலுவை வருமான அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிய தருகின்றேன் |

2.3.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சில வருடங்களாகக் கொண்டு வரப்படுகின்ற நிலுவை கடை வாடகை ரூபா 897,069 ஆக இருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதனைப் பதிவழிப்பதற்கு மாகாண பிரதம அமைச்சரின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது என அறியத் தருகின்றேன். |

2.3.4 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதி வரையில் ஏனைய வருமானம் ரூபா 14,935,262 தொகை அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக என்பதை அறியத் தருகின்றேன். |

**2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2019 திசெம்பர் 31 அன்று கிடைக்க வேண்டிய கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா. 13,438,168 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா.288,100 ஆக இருந்தது | பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களை பெற்றுக்கொள்ள வேண்டும். | நிலுவை வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| விதிக்கப்பட்டுள்ள உப விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்ற வேண்டிய இலக்குகளை குறிப்பிட்டு வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதும் அதன் நிதி இலக்குகள் குறிப்பிடப்பட்டிருக்கவவில்லை. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இலக்குகளை உள்ளடக்க வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறியத் தருகின்றேன். |

(ஆ) எதிர்பார்த்த நலன்களை பெற்றக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சுடலைச்சாலைக்கு செல்லும் வீதியை அபிவிருத்தி செய்தற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,770,000 செலவிடப்பட்டிருந்த போதும் மழை காலங்களில் குறீத்த வீதியை பயன்படுத்த முடியாதிருந்தது. | முதிப்பீடு செய்யும் போது செயற்திறனாக வீதியை பயன்படுத்தக்கூடிய வகையில் நடவடிக்கை எடுப்பது சபையின் பொறுப்பாகும். | வீதியை அபிவிருத்தி செய்தற்காக நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

(இ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக ரூபா 3,483,005 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் முறையான முககாமைத்துவம் இன்றி அரசாங்கத்தின் ஒதுக்கப்பட்ட காணியில் தினந்தோறும் அகற்றப்பட்டிருந்தது. | கழிவு முகாமைத்துவத்தை முறையாக மேற்கொள்ள வேண்டும் | பிரதேச சபைக்கு பொருத்தமான இடத்தில்காணி உரித்து காணப்படாமை இதற்கான இருந்தது. |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019 வருடாந்த பொருள் மெய்மையாய்வு மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா 54,303 தொகையான நூலக புத்தகங்கள் பற்றாக்குறை தொடர்பாக நி.பி 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளூராட்சிமன்ற உதவி ஆணையாளரின் ஆலோசணையின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதாக அறிய தருகின்றேன். |
| (ஆ) 2018 வருடாந்த பொருள் மெய்மையாய்வு மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபாரூபா 98,000 ஆன GI குழாய்கள் பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நட்டங்கள் விரைவில் அறவிடப்பட வேண்டும். | இது தொடர்பாக பரிசோதனை குழுவொன்றின் பரிந்துரையின் பேரில் தொடர் நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஊழியர் வெற்றிடம் | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சபையில் 21 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. | ஊழியர் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | கணக்காய்வு விடயத்தை ஏற்றுக்கொள்கின்றேன். |
| (ஆ) ஊழியர் கடன் | | |
| (i) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அததியாயத்தின் 3.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளை கருத்திற் கொள்ளாமல் 2019 ஆம் ஆண்டின் போது 10 மாத சம்பளக் கடன் முற்பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இந்த மீதிகளை பதிவழிப்பதற்கு பிரதம அமைச்சரின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன் |
| (ii) தற்போது சேவையில் ஈடுபடாத இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து ஊழியர் கடனாக ரூபா 46,316 தொகை அறவிட வேண்டியிருந்தது. | நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இம்மீதிகளை பதிவழிப்பதற்காக பிரதான அமைச்சரின் அங்கீகாரத்திற்காக தொடர்புபடுத்தியுள்ளதாக அறிய தருகின்றேன். |

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 சொத்துக்களை பதிவேடுகளுக்கு உட்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆம் ஆண்டின் போது புறநெகும செயற்திட்டத்தின் மூலம் சபைக்கு வழங்கப்பட்ட நீர் உபகரணங்கள் இருப்பு மீளாய்வாண்டு வரை பதிவேடுகளுக்கு உடபடுத்தப்பட்டிருக்கவில்லை. | சபையின் சொத்துக்களை இனங்கண்டு பதிவேடுகளுக்கு உட்படுத்துதுல் வேண்டும். | 2020 இன் போது சீராக்குவதாக அறியத் தருகிறேன். |

### 3.4.2 சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைக்குரிய 2 1/2 ஏக்கர் அளவிலான குருவெலயாய பொது மயானத்தின் 1/2 ஏக்கருக்கு மேற்பட்ட பகுதியொன்றை நபரொருவரால் அனுமதியின்றி கையேற்கப்பட்டிருந்தது. | சபையின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணி கையேற்றல் நடவடிக்கை இடம்பெற்று வருவதாக அறிய தருகின்றேன். |

3.4.3 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட 05 வாகனங்கள் கையேற் கப்பட்டிருக்கவில்லை. | உரிய வாகனங்கள் கையேற்கப்பட வேண்டும். | வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிய தருகின்றேன். . |

3.4.4 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நீண்ட காலமாக எவ்வித பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் 08 வாகனங்கள் மீண்டும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத மட்டத்தில் காணப்பட்டன. | வாகனங்களை பழுதுபார்ப்பதற்கு அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு இயந்திர பொறியியலாளரின் அறிக்கையை பெற்றுகொள்வதற்கு கோரப்பட்டுள்ளதாக அறியத்தருகின்றோம். |
| (ஆ) | 2006 ஆம் ஆண்டின் போது நன்கொடையாகக் கிடைத்த மின் பிறப்பாக்கி இயந்திரம் எந்தவித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் சபை வளவில்காணப்பட்டது. | சொத்துக்களை செயற்திறனாக பயன்பாட்டிற்கு எடுக்கநடவடிக்கை எடுக்க வேண்டும். | பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

3.5 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையின் 3.1 பந்தியின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான சில வாகனங்களுக்காக எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனங்ளின் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் | இது ொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசணை வழங்கியுள்ளதாக அறிய தருகின்றேன். |

3.6 வெளிப்படையான மோசடிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண திட்டவட்டமான மானியம் - 2018 விசேட பொருளாதார உட்கட்டமைபபு வசதிகளை மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறுநீரக நோயாளர் வாழும் 103 வீடுகளுக்காக ரூபா 478,900 பெறுமதியான 103 நீர்த்தாங்கிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் அந்நீர்த்தாங்கிகள் தெரிவுசெய்யப்பட்ட நலனாலிகளுக்கு வழங்காமல் பிரதேச சபை உறுப்பினர்களால் பிரதேச சபை மரண உதவிச் சங்கங்களுக்கும் ஏனைய நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. | தெரிவு செய்யப்பட்ட நலநாளிகளுக்கு பொருட்கள் கையளிக்கப்பட வேண்டும் | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் இடம் பெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

3.7 பெறுகை

3.7.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2006 இன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் சபையினால் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்தம் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படு என அறிய தருகின்றேன். |

3.7.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) கம்புருஓயா பிரிவில் பாடசாலை வீதியை அபிவிருத்தி செய்தல் ----- | | |
| செயற்திட்டத்திற்காக பெதும் அல டீ 58/59 விவசாய அமைப்புடன் ரூபா 835,000 இற்கு உடன்படிக்கையில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் பௌதீக பரிசோதனையின் போது வீதியின் மேற்பரப்பு மற்றும் | மதிப்பீட்டின் பிரகாரம் வீதியை தயார்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படு என அறிய தருகின்றேன். |

வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த மதகு மேற்பரப்பில் வீதியின் மேல் குருணிக் கற்கள் இடப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்
---

உள்ளகக் கணக்காய்வு
---

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | போதியளவில் பங்களிப்பினை வழங்க கூடிய வகையில் உள்ளக கணக்காய்வு பிரிவொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். | ஊழியர் வெற்றிடங்கள் காரணமாக இந்நிலைமை உருவாகியிருந்ததாக அறிய தருகின்றேன். |
| (ஆ) | உள்ளக கணக்காய்வுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுவில் கலந்துரையாடுவதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | உள்ளக கணக்காய்வுத் திட்டமொன்று முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |